DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.250/2025**

Prosecution **PW.6**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திருமதி.சுகந்தி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | சிவக்குமார் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருச்சி பொருளதார குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 31.01.2022ம் தேதி லாலாப்பேட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது உதவி ஆய்வாளர் திரு. மாரிமுத்து லாலாப்பேட்டை குற்ற எண். 51/2022 ச/பி 279,337,இதச படி வழக்கு பதிவு செய்து முதல் விசாரணை செய்து இவ்வழக்கில் காயம்பட்ட நபர் மணிஎன்பவா 19.01.2022ம் தேதி 21.00 மணிக்கு திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279,337 இதசலிருந்து 279, 304(ஏ) வாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார்.

2. பிரேத விசாரணை முடித்து எனது பார்வைக்கு வைத்து நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 14.00 மணிக்க நான் லாலாப்பேட்டை காவல் நிலையம் ஆஜரான எதிரி சிவக்குமாரை காரணம் கூறி கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்தேன். பின்பு எதிரி பயன் படுத்திய TN 49 BU6770Hero Honda Splender Plus என்ற இரு சக்கர வாகனத்தை 22.02.2022ம் தேதி வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன

ஆய்வறிக்கை பெற்று 04.03.2022ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. 04.03.2022ம் தேதி இறந்து போன மணி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் கனகாஸ்ரீ அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **(மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**4.** பின்பு பிரேதத்தை பரிசோதனைக்கு உட்படுத்தி முதல்நிலைகாவலர் 1513 திரு.ரஞ்சித், மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.மாரிமுத்து ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் என் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள 279, 304(A) ன் படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. பொதுவாக ச/பி 304(ஏ) வழக்கில் ஆய்வாளர் தான் புலன் விசாரணை செய்யவேண்டுமென்றால் சரிதான். ஆய்வாளர் வெளியில் இருந்தால் பொறுப்பில் இருப்பவர்கள் செய்வார்கள். மணி எனபவர் என்றைக்கு இறந்து போனார் என்றால் 19.01.2022 அன்று இறந்துவிட்டார். அதற்கு பின்னிட்டு உதவி காவல் ஆய்வாளர் சாட்சிகளிடம் மறுவிசாரணை செய்துள்ளார் என்றால் சரிதான். மணி என்பவர் காயம் பட்டவுடன் முதலில் எங்கு சென்று அட்மிட் ஆனார் என்றால் நாச்சிமுத்து மருத்துவமனையில் சேர்ந்துள்ளார்.

2. நாச்சிமுத்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான விபத்து பதிவேடு என்னிடம் காட்டப்படுவதுதான். **நாச்சிமுத்து மருத்துவமனை விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** யார் முதன் முதலில் மருத்துவமனையில் சேர்த்தாகவும் குறிப்பாக அவர் மனைவி தாமரை காயம் பட்ட நபரை சேர்த்தாகவும் குறிப்பிடவில்லைஎன்றால் சரிதான். காயம் பட்ட நபர் எதற்காக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படுவதுதான் கரூர் அரசு மருத்துவமனையின் விபத்து பதிவேடு என்றால்சரிதான். **கரூர் அரசு மருத்துவமனையின் விபத்து பதிவேடு**

**அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மணி என்பவர் மேல்சிகிச்சைகாக திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். **திருச்சி அரசு மருத்துவமனையின் விபத்து பதிவேடு அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. இந்த வழக்கில் காயம் பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த தனியார் மருத்துவமனை மருத்துவர், கரூர் அரசு மருத்துவமனை மருத்துவர், திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் ஆகியோர்களை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால்சரிதான். எதிரியை எப்போது கைது செய்தேன் என்றால் 31.01.2022 14.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து கைது செய்தேன். எதிரியை கைது செய்த பிறகு பட்டியல் சாட்சி 1 முதல் 3 நபர்களை அழைத்து எதிரியை அடையாளம் காண்பிக்கச்சொன்னீர்களா என்றால் இல்லை.

5. விபத்து 17.01.2022 அன்று நடந்தது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் 02.02.2022 அன்று தான் மோட்டார் வாகன ஆய்வு செய்தார் என்றால் சரிதான். அன்றைய தினம் தான் பரிந்துரை செய்தேன் என்றால் சரிதான். 15 நாட்கள் இருசக்கர வாகனம் எங்கிருந்தது என்றால் காவல் நிலையத்தில் இருந்தது. 15 நாட்கள் காலதாமதமாக ஆய்வு செய்ததற்க சிறப்பு காரணம் உண்டா என்றால் இல்லை.

6. இறுதி அறிக்கையில் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், ரோட்டின் தென்புறம் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த மணி என்பவர் ஆடு வடக்கு நோக்கி குறுக்கே சென்றால் அதை ஓட்டும் பொருட்டு கிழக்கில் இருந்த எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை கவனிக்காமல் திடிரென்று ரோட்டின் குறுக்கே வந்து மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார்ள ன்றால் சரியல்ல. இறந்தவர்க்காக விபத்து நஷ்டஈடு பெறுவதற்க்காக பொய்யாக வழக்கு பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தின் காரணம் இறந்துபோன மணி என்பவர் தான் என்றாலும் நான் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.19 11:03:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.